வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கடலூர், திவான் பகதூர் ஸ்ரீசுப்புராயலு ரெட்டியார் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 71வது கூட்டுறவு வார விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை நேற்று முன்தினம் (20.11.2024) வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் பாராளுமன்ற உறுப்பினர் மரு.எம்.கே.விஷ்ணு பிரசாத், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ம.சிந்தனைச்செல்வன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, மாநகராட்சி துணைமேயர் பா.தாமரைச்செல்வன் உட்பட பலர் உள்ளனர்.

கடலூரில்-71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - சி.வெ.கணேசன் பங்கேற்பு!

கடலூர், நவ.22-

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் 71-வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவினை முன்னிட்டு 333 பயனாளிகளுக்கு ரூ.2.27 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளை வழங்கினார்கள்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் மரு.எம்.கே.விஷ்ணு பிரசாத், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், கடலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் கடலூர், திவான் பகதூர் ஸ்ரீசுப்புராயலு ரெட்டியார் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 71-வது கூட்டுறவு வார விழாவில் 333 பயனாளிகளுக்கு ரூ.2.27 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளை நேற்று முன்தினம் (20.11.2024) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கலைஞரின் கனவு இல்லத்திட்ட பயனாளிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் 7 பயனாளிகளுக்கு ரூ.7 இலட்சம் கடனுதவியும், கல்விக்கடன் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.1.50 இலட்சம் கடனுதவியும், ஒரு மாற்றுத் திறனாளி, ஒரு நாட்டுப்புறக் கலைஞர் மற்றும் ஒரு கைம்பெண் ஆகியோர்களுக்கு தலா ரூ.50,000 வீதம் 3 நபர்களுக்கு ரூ.1.50 இலட்சம் கடனுதவியும், 6 நபர்களுக்கு விவசாயம் சார்ந்த கடனுதவியாக ரூ.13,03,000 இலட்சம் கடனுதவியும், 5 தொழில்முனைவோர்களுக்கு ரூ.2.50 இலட்சம் தொழிற்கடனுதவியும், சிறு வணிகர் கடனாக 6 பயனாளிகளுக்கு ரூ.3 இலட்சம் கடனுதவியும், மகளிர் தொழிற்முனைவோர் கடனாக 2 நபர்களுக்கு ரூ.1 இலட்சம் கடனுதவியும், 19 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 302 மகளிர்களுக்கு ரூ.1,97,35,000 மதிப்பீட்டிலான கடனுதவி என மொத்தம் 333 பயனாளிகளுக்கு ரூ.2,26,88,000 மதிப்பீட்டிலான கடனுதவிகளை வழங்கினார்கள். மாவட்ட அளவில் சிறந்த கூட்டுறவு நிறுவனங்களாக தேர்வு செய்யப்பட்ட 47 கூட்டுறவு சங்கங்களை பாராட்டி நினைவு பரிசுகளையும் வழங்கினார்.

71-வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவினை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகிய போட்டிகளில் முதல் 3 இடங்களை பிடித்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

இதில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது :-

இந்திய அரசின் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் விவசாயத்திற்கும், கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பள்ளிக்கூடம், ஒரு கூட்டுறவுச்சங்கம், ஒரு ஊராட்சி அலுவலகம் இன்றியமையாதவை என்பதனை வலியுறுத்தியவர் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆவார். அவரது நினைவினை போற்றும்வகையில் அவரது பிறந்த நாளான நவம்பர் 14 முதல் 7 நாட்களுக்கு கூட்டுறவு வாரம் இந்தியளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. கூட்டுறவுக் கொள்கைகளையும், செயல்பாடுகளையும் பொதுமக்களுக்கு விளக்கி தெரிவிக்கும் விழாவாக 71-ஆவது கூட்டுறவு வாரவிழா அமைந்துள்ளது.

எளிதில் மருத்துவ வசதி!

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006-ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பேற்ற பொழுது விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனை இந்தியாவிற்கே முன்மாதிரியாக கடனை தள்ளுபடி செய்தார். விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தினை வழங்கியவர், மகளிர் சுய உதவிக்குழுக்களை தோற்றுவித்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அவர்கள் காட்டிய வழி செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். மாதந்தோறும் ரூ.1000 பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். பணிக்கு செல்லும் பெண்களின் பொருளாதார சுமைகளை குறைத்திடும் வகையில் கட்டணமில்லா பேருந்து திட்டமான விடியல் பயணத் திட்டத்தினையும் ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள்.

இதன் வாயிலாக ஏராளமான பெண்கள் பயன் பெற்று வருகிறார்கள். வயதானவர்கள், முதியவர்கள் மருத்துவமனைக்கு சென்று தங்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகளை பெறுவதற்காக ஏற்படும் காலதாமதம், போக்குவரத்து அலைச்சல் போன்றவற்றை தவிர்த்திடும் விதமாக மருத்துவர்கள் நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று சிகிச்சை வழங்குவதற்காக மக்களைத் தேடி மருத்துவம் என்னும் சிறப்புத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள். இதன் மூலம் பொதுமக்கள் எளிதில் மருத்துவ வசதி பெற முடிகிறது.

கூட்டுறவுத்துறை மூலம் விவசாயிகள், மகளிர், மாணவ, மாணவியர்கள் என அனைவரும் பயன்பெறும் வகையில் நகைக்கடன், சுயஉதவிக்குழு கடன். தொழிற்கடன், உரம், டிராக்டர், மளிகைப் பொருட்கள் என பன்முகத்தன்மையுடன் கூட்டுறவுத் துறை செயல்பட முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள். கூட்டுறவுத் துறையின் மூலம் தரம், நியாயமான விலை, நம்பிக்கை என்பது உறுதிப்படுத்தப்பட்டுவருகிறது.

பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் 1,138 முழுநேர நியாயவிலைக் கடைகள், 309 பகுதி நேர நியாயவிலைக் கடைகள் என மொத்தம் 1,447 நியாய விலைக் கடைகளின் மூலம் 7,90,917 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. சமூக பாதுகாப்பினை உறுதிசெய்திடும் வகையில் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று புதியதாக 14 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 36 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 120 நியாயவிலைக் கடைகளுக்கு ரூ.13 கோடி மதிப்பீட்டில் சொந்த கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் 3,39,937 பயனாளிகளுக்கு பயிர்க்கடனாக ரூ.2,407.16 கோடி கடனுதவியும், 33,484 பயனாளிகளுக்கு கால்நடை பராமரிப்புக் கடனாக ரூ.133.12 கோடி கடனுதவியும், 3,124 பயனாளிகளுக்கு மத்தியக்கால கடனாக ரூ.46.57 கோடி கடனுதவியும், 3,87,615 பயனாளிகளுக்கு நகைக் கடனாக ரூ.3,116.86 கோடி கடனுதவியும், 4,112 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.205.17 கோடி கடனுதவியும், 2,502 பயனாளிகளுக்கு தானிய ஈட்டுக் கடனாக ரூ.85.74 கோடி கடனுதவியும், 6,856 பயனாளிகளுக்கு சிறு வணிகக் கடனாக ரூ.28.47 கோடி கடனுதவியும், 1,148 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.5.39 கோடி கடனுதவியும், 182 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு டாப்செட்கோ கடனாக ரூ.10.64 கோடி கடனுதவியும், 641 சிறுபான்மையினர்களுக்கு டான்கோ கடனாக ரூ.5 கோடி கடனுதவியும், 1,403 ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்த பயனாளிகளுக்கு தாட்கோ கடனாக ரூ.8.54 கோடி கடனுதவியும், 587 பணிபுரியும் மகளிர்களுக்கு ரூ.8.02 கோடி கடனுதவியும், 3,073 பயனாளிகளுக்கு ரூ.14.85 கோடி மதிப்பீட்டில் சிறு மற்றும் குறு தொழிற்கடனாகவும், 1,384 கைம்பெண் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு ரூ.4.4 கோடி மதிப்பீட்டிலான கடனுதவியும், 637 நாட்டுப்புற கலைஞர்களுக்கு ரூ.3.61 கோடி மதிப்பீட்டிலான கடனுதவியும், 22 கிராமங்களுக்கு ரூ.2.37 கோடி மதிப்பீட்டில் வேளாண் இயந்திரங்கள் வாடகைத் திட்டத்தின் கீழ் டிராக்டர், உதவி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 7,89,508 பயனாளிகளுக்கு ரூ.6,133 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் தகுதியுள்ள அனைவருக்கும் சென்றடைய வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திட வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் அவர்கள் பொற்கால ஆட்சியினை நடத்தி வருகிறார்கள். கூட்டுறவே நாட்டுயர்வு என்பதனை கருத்தில்கொண்டு பொதுமக்கள் தமிழ்நாடு அரசின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என தெரிவித்தார்.

அமைச்சர் சி.வெ.கணேசன் பேச்சு!

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் பெண்கள் முன்னேற வேண்டும், சமூக சமநிலையினை அடைந்திட வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். பெண் கல்வியை ஊக்கவிக்கும் பொருட்டு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் கல்லூரி கல்வி பயில மாதந்தோறும் ரூ.1000 வழங்கி வருகிறார்கள். கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவுத் துறையின் மூலம் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதாவது பெண்கள் சுயதொழில் தொடங்கி தொழில்முனைவோர்களாக உருவாகிட குறைந்த வட்டியில் கடனுதவியும், கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் தங்களுக்கான வீட்டினை தாங்களே கட்டிக்கொள்ளும் வகையில் ரூ.3.50 இலட்சம் வழங்கப்படுகிறது. கூடுதல் செலவினங்களுக்காக கூட்டுறவுத் துறை மூலம் ரூ.1 இலட்சம் வரை கடனுதவியும் வழங்கப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலைவேற்றத்தினை கட்டுப்படுத்திட அரிசி, பருப்பு, பாமாயில், சர்க்கரை, கோதுமை போன்ற பொருட்கள் நியாய விலைக் கடைகள் மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு சங்கங்கள் விவசாய பெருங்குடி மக்களின் முன்னேற்றத்தையும் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டு செயல்பட்டு வந்தாலும், வங்கிச்சேவை, உரவிநியோகம், இடுபொருள் விநியோகம், பொதுவிநியோகத் திட்டம் வாயிலாக அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்தல், நகைக்கடன் மற்றும் இதர கடன் வசதி திட்டங்கள் மகளிர் மற்றும் ஆடவர் குழுக்கள் மூலம் கடன் வழங்குதல் டாப்செட்கோ (TABCEDCO)> டாம்கோ (TAMCO) மற்றும் தாட்கோ (TAHDCO) கடன்கள் வழங்குதல், மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்கள், தமிழக அரசு அறிவித்த வேளாண் கடன் தள்ளுபடி திட்டம், நகைக்கடன் தள்ளுபடி திட்டம், சுய உதவிக் குழு தள்ளுபடி திட்டங்களை நிறைவேற்றுதல் மற்றும் அரசின் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றுதல் போன்ற பணிகளை கூட்டுறவு சங்கங்கள் செய்து வருகின்றன.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு வங்கிகள் கணினி மயமாக்கப்பட்டு RTGS வசதி NEFT வசதி E-Banking ஆகிய பணப்பரிமாற்ற வசதிகளை கொண்டு மக்களுக்கு சேவை செய்து வருகிறது. இலாப நோக்குடன் செயல்படும் தனியார் நிறுவன ஆதிக்கத்திலிருந்து சாமான்ய மக்களை விடுவித்து கிராமப் பொருளாதாரத்தை உயர்த்திடும் முக்கிய இயக்கமாக கூட்டுறவு இயக்கம் செயல்பட்டு வருகிறது.

இவ்வகையில் பொதுமக்களின் அனைத்து வாழ்வியல் அம்சங்களிலும் கூட்டுறவு இயக்கம் சேவையாற்றி எளியமனிதனின் முன்னேற்றத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் சிறந்த சேவையாற்றி வருகிறது. இச்சேவையினை பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்என தெரிவித்தார்.

தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் நடைபெற்று வரும் வாக்காளர் சேர்த்தல் நீக்கல் சிறப்பு முகாமினை மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் நேரில் ஆய்வு செய்தார்.இந்நிகழ்ச்சியில் கிளைக் கழக செயலாளர்கள் பூக்கார. வெங்கடேசன்,மற்றும் வாக்கு சாவடி முகவர்கள்(BLA2) கலந்து கொண்டனர்.

சேலம், நேரு கலையரங்கத்தில் நேற்று முன்தினம் (20.11.2024) நடைபெற்ற மாநில அளவிலான 71வது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் மாநில அளவில் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டு கேடயங்களை வழங்கினார்கள். உடன் கூட்டுறவு, உணவு நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என். சுப்பையன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன். சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங், உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவு நிர்வாகிகள் உள்ளனர்.

சேலத்தில்- 71-ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழா!

அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் - இரா.இராஜேந்திரன் பங்கேற்பு!

சேலம், நவ.22-

மாநில அளவிலான 71-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழா கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில் நேற்று முன்தினம் (20.11.2024) சேலம், நேரு கலையரங்கத்தில் நடைபெற்றது.

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

இவ்விழாவில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:

முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்துறைகளும் சிறப்பாக, சீரான வளர்ச்சியை அடைய வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு வருகிறார்கள். இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாடு பாராட்டப்பட்டு வருகிறது என்றால் அதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பான திட்டங்களே காரணமாகும். குறிப்பாக, கூட்டுறவுத்துறையின் வளர்ச்சி என்பது அனைவராலும் பாராட்டும் வகையில் இருக்கிறது என்றால் அது மிகையாகாது.

இந்திய அளவில் முதல் கூட்டுறவு சங்கமாக 1904-ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம், திரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் தொடங்கப்பட்டது. ஆகவே கூட்டுறவு சங்கங்களின் பிறப்பிடமே தமிழகம் என்று சொன்னால் அது மிகையாகாது. இச்சங்கத்தில் சேருபவர்கள் தரும் பங்குத்தொகை மூலமாகவே இதற்கான முதலீடுகள் செய்யப்படுகிறது.

மூதறிஞர் இராஜாஜி, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் இக்கூட்டுறவுச் சங்கங்களில் அங்கமாக இருந்து தங்களது பங்களிப்பை செலுத்தி உள்ளனர்.

நடப்பு ஆண்டிலும் மாநில அளவில் 14.11.2024 முதல் 20.11.2024 வரையிலான 7 நாட்கள் கூட்டுறவு வார விழாவினை கொண்டாடும் விதமாக ஒவ்வொரு நாளும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, அதன் மூலம் பொதுமக்கள் மற்றும் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, கூட்டுறவின் மாண்புகளும் சிறப்புகளும் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக, கொரோனா வைரஸ் காலகட்டத்தில் பொதுமக்களுக்கு நியாயவிலைக்கடை பொருட்கள் வழங்கியது முதல் முன்களப் பணியாளர்களாக செயல்பட்டது, வெள்ளம், புயல் காலங்களில் பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கியது வரை அனைத்து பணிகளையும் கூட்டுறவுத்துறை பணியாளர்கள் மேற்கொண்டனர். பொதுமக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை கொண்டு சேர்க்கும் துறை இக்கூட்டுறவுத்துறையாகும். அதேபோன்று கூட்டுறவுத்துறை மூலம் நியாயமான விலையில் தரமான பொருட்களை வழங்கி வருகிறது.

கூட்டுறவு நிறுவனங்களில் பயிர்க்கடன், கால்நடை பராமரிப்புக் கடன், நகைக்கடன், சுய உதவிக் குழு கடன், சிறு வணிகக் கடன், மாற்றுத்திறனாளி கடன், மத்திய காலக் கடன், மகளிர் தொழில்முனைவோர் கடன், விதவை மற்றும் கைம்பெண்கள் கடன், பணிபுரியும் மகளிர் கடன், தானிய ஈட்டுக்கடன், டாப்செட்கோ, டாம்கோ, தாட்கோ, வீட்டு வசதிக்கடன், பண்ணைசாராக் கடன், வீடு அடமானக்கடன், கல்விக்கடன், கைவினைஞர் கடன் ஆகிய கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் பயிர்க்கடன் நிலுவையிலிருந்த 16,43,347 உறுப்பினர்களுக்கு ரூ.12,110.74 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது. அதேபோன்று பொது நகைக்கடன்களில் மொத்த எடை 5 பவுன் வரை அடமானம் வைத்து நகைக்கடன் பெற்ற பயனாளிகளுக்கு ரூ.4,889.78 கோடி கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்தில் முதன்முறையாக மகளிர் சுய உதவிக்குழுக் கடன்கள் முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்படி, ரூ.2,674.64 கோடி கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, ஒரு கூட்டுறவு வங்கியானது 10 தேசிய வங்கிகளுக்கு சமமாகும். அந்த அளவுக்கு கூட்டுறவுத்துறை மூலம் பொதுமக்களுக்கு வங்கி சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், அதன் கிளைகள், கிராமங்களில் உள்ள கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர்புறங்களில் உள்ள கூட்டுறவு வங்கிகள் என அனைத்து வங்கிகளையும் சேர்த்து கடந்த ஆண்டு ரூ.86,000 கோடி வரவு செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் முதலமைச்சர் அவர்கள் ரூபாய் ஒரு இலட்சம் கோடி இலக்கை நோக்கி செயல்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். கூட்டுறவு வங்கிகள் என்பது கடன் தருவதற்கான அமைப்பு மட்டும் கிடையாது. எனவே அனைவரும் கூட்டுறவு வங்கிகளில் தங்களது வங்கிக் கணக்கை தொடங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

அமைச்சர் இரா.ராஜேந்திரன் பேச்சு!

இவ்விழாவில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் பேசியதாவது:

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு கூட்டுறவுத்துறையின் மூலம்மிகவும்சிறப்பாகவும், செம்மையாகவும் மற்ற மாநிலங்கள் பின்பற்றுகின்ற வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களின் சிறப்பான ஆட்சியினால் தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் முன்னனி மாநிலமாக திகழ்கிறது.

தமிழ்நாட்டை மகளிருக்கான பல்வேறு உரிமைகளை வழங்கிய மாநிலமாகவும், பகுத்தறிவு நிறைந்த மாநிலமாகவும், இட ஒதுக்கீட்டில் இந்தியாவிலேயே முதலிடம் பெற்ற மாநிலமாகவும், பல்வேறு துறைகளில் முதன்மையான மாநிலமாகவும் திகழ்வதற்கு தந்தை பெரியார் அவர்களின் வழியில் பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களையும் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து பணியாற்றி வருவது தான் காரணமாக விளங்குகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிற்கே முன்னோடியாக பெண்களுக்கு சொத்தில் சம உரிமைச் சட்டத்தை கொண்டுவந்தார். வெளிநாடுகளில் இருக்க கூடிய ஆட்சியாளர்கள் பின்பற்ற கூடிய திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் செயல்படுத்தி வருகிறார்கள். சேலம் மாவட்டத்தை பொருத்த வரை தமிழ்நாடு அளவில் கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்படக் கூடிய மாவட்டமாக விளங்குகிறது. மற்ற மாவட்டங்களுக்கெல்லாம் முதன்மை மாவட்டமாக கூட்டுறவுத்துறையின் மூலம் மகளிர் சுய உதவிக் குழு, விவசாயிகள், நெசவாளர்கள், தொழில் முனைவோர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பல்லாயிரம் கோடி கடனுதவிகள் சேலம் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று மலைவாழ் மக்களின் நலனுக்கென கூட்டுறவுத்துறையின் மூலம் சேலம் மாவட்டம், பாலமலை, வாழவந்தி, தும்பல்பட்டி மற்றும் கல்வராயன் மலை உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்கள் பயனடையும் வகையில் பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. சிறப்பான நிர்வாகத்தை வழங்கி வரும் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு கூட்டுறவுத்துறை அமைச்சர் சிறப்பாக பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இன்றைய தினம் நடைபெறும் இவ்விழாவின் வாயிலாக கடனுதவிகள் பெறும் அனைத்து பயனாளிகளும் தங்கள் வாழ்வில் மேன்மேலும் உயர எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்.

இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள் கூட்டுறவுத் துறையின் பல்நோக்கு சேவைத் திட்டத்தின் கீழ் ரூ.3.34 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட 5 கட்டடங்களையும், ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட 11 புதிய நியாயவிலைக்கடை கட்டடங்களையும் திறந்து வைத்து. 6,181 பயனாளிகளுக்கு ரூ.55.71 கோடி மதிப்பிலான கூட்டுறவுத்துறையின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மேலும் மாநில, மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாராட்டுக் கேடயங்கள், பல்வேறு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு, உணவு நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ப.இரவிக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, பனமரத்துப்பட்டி ஊராட்சி மன்ற உறுப்பினர் பாரப்பட்டி சுரேஷ்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவு நிருவாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் ஊட்டச்சத்து உறுதி செய் திட்டத்தின்கீழ் ஊட்டச்சத்து பெட்டகங்களை தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் நேற்று முன்தினம் (20.11.2024) அன்று நடைபெற்ற விழாவில் 583 கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்க